மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரங்களில் விதியை மீறி கொடுத்தேன் என்று தான் சொன்னேன். உங்களுக்காகத் தான் செய்தேன். எனக்காக எதையும் நான் செய்வது இல்லை. உறுப்பினர்களைத் திருப்தி செய்வதற்காகத் தான் செய்தேன். It is a passing remark. It was not uttered seriously.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது. இன்றைக்கு நிதி ஒதுக்கீடு மசோதா வருகிறது. அதில் பேசுகிற போது யாரேனும் ஒருவர் இந்தக் கருத்தை எடுத்துப் பேசலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பு இருக்கும்போது, இதை பாயின்ட் ஆப் ஆர்டரில் பேச வேண்டிய அவசியம் இல்லை.

(ஊ) மாநிலங்கள் அவையில் நடந்த விவாதம் குறித்து

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்திய மாநில அவையில் இந்திய துணைக் கண்டம் எதிர்பாராத அளவுக்கு ஜனநாயகத்திற்கு ஒரு மாசு கற்பிக்கும் வகையில், ஜனநாயகத்தைக் கொச்சைப் படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. நீதித் துறையின் சுதந்திரத்தை அழிக்கவும், அச்சுறுத்தவும் திமிர் பிடித்த சிலர் அக்கிரமச் செயலை ஆரம்பித்து விட்டார்கள் என்றும், ஏப்ரல் 7ஆம் தேதி அன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் சபாநாயகர் தீர்ப்பு நீதித் துறையின் சுதந்திரத்தைப் சாகடிப்பது போல் இருக்கிறது என்றும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டெல்லியில் மேல் சபையில் அவர்கள் அதை பேசினார்கள் என்றால் அதை நாம் இங்கே விவாதிக்க வேண்டியது இல்லை. (குறுக்கீடு) வெளியே யாரும் பேசலாம். நீங்கள் 234 மாண்புமிகு உறுப்பினர்கள் என் மேல் நம்பிக்கை, கான்பிடென்ஸ் வைத்து இருக்கும்போது அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். I have your full confidence love and affection அது போதும், அதுதான் முக்கியம். நீங்கள் இருக்கும்போது யாரும் வேண்டாம்.

(முற்பகல் 10-20)

(எ) திருச்சி நகரில் நிலவும் பதட்ட நிலை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக திருச்சி மாநகரத்திலே பரபரப்பூட்டுவதாகவும், அச்சுறுத்துகின்ற நிலையிலும், இன்றைய தினம் திருச்சியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம், கிட்டதட்ட 160-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயந்து, ஒளிந்து, வெளியே இருக்கின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு). . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பெரிய விவகாரத்தை எழுதிக் கொடுத்தால் நல்லது. பதில் சொல்வதற்கு எளிதாக இருக்கும். இவ்வளவு தகவலும் அமைச்சரிடம் இருக்காது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாட்டிலே நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவை விரும்பத் தக்க வகையிலும் நடைபெறுகின்றன, விரும்பத் தகாத வகையிலும் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் இந்த அவை பொறுப்பேற்று, பதில் கூறுவது என்பது இயலாது. பல்வேறு முறைகளினுடைய அடிப்படையிலே கொண்டு வந்தால், இந்த அவை பொறுப்பேற்று பதில் சொல்வதற்கு இயலும். ஆக அந்த வகையிலே சொல்லமுடியுமே தவிர, ஒவ்வொரு பிரச்சினைக்கும் பதில் சொல்வதற்கு இடம் கொடுப்பது என்பது, பொருந்தி வராது. அதற்கு இப்படிப்பட்ட ஜீரோ அவரே இந்த அவையைப் பொறுத்தவரையில் இல்லை. அதை அனுமதிப்பதும் கூட தவறு. அதை இனிமேல் கடைப்பிடிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(ஏ) கோட்டூர்புரத்தில் கட்டப்பட்டுள்ள குடிதண்ணீர் தொட்டி குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கோட்டூர்புரம் பகுதியில் தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டி— (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தந்த அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். அப்போதுதான் பதில் கிடைக்கும். (குறுக்கீடுகள்) வாய்ப்பு கொடுத்தால், பெரிய பிரச்சினை உண்டாகும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் மலர்மன்னன் ஆகட்டும், மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமீ ஆகட்டும், அவர்களுடைய கருத்துக்களை ஏதேனும் விதிமுறையின் கீழ் எழுதிக் கொடுத்தால், அதற்கான பதிலை வழங்குவதுதான் முறையே தவிர, அவரவர்கள் விருப்பப்படி எடுத்துச்சொல்வது, அதற்கான பதில் பெற வேண்டுமென்பது சரியாக ஆகாது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுப்புவதற்கு அனுமதி கொடுத்துவிட்டேன். இவ்வளவு பெரிய விவகாரம் என்றால் எழுதிக் கொடுங்கள் என்கிறேன். அப்ரோப்பிரியேஷன் பில் வரும்போது உங்கள் கட்சி சார்பில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஆக அனுமதித்தேன். அனுமதிக்காமல் இல்லை. அவ்வளவுக்கும் அமைச்சரிடம் பதில் இல்லை.